**Date: 27.08.2024**

**MCOP. No. 53 /2022**

**PW.1:**

**Name: ஹரிபாண்டியன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கபடுகிறார்.**

**1மற்றும்2 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தன்று நான் இருசக்கரவாகனத்தில் பயணிக்கும் போது தலைகவசம் அணிந்திருந்தேன். விபத்தில் எனக்கும் எனது தந்தைக்கும் காயம் ஏறப்ட்டது. எனது தந்தைக்கு ஏற்பட்ட காயம் பற்றி நான் எவ்விடத்திலும் கூறவில்லை என்றால் ஆமாம். எனக்கு விபத்தில் எலும்பு முறிவு ஏற்படவில்லை என்றாலும் ரத்தக்காயம் மட்டுமே ஏற்ப்பட்டது என்றாலும் சரியல்ல. எலும்பு முறிவு ஏற்பட்ட விபரம் பற்றி நிருபண வாக்குமுலத்தில் சொல்வில்லை என்றாலும் தெரியவில்லை. நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் வேலை எதுவும் செய்யவில்லை. எனக்கு 2017 திருமணம் ஆகிவிட்டது. எனது மனைவி போன் கடையில் வேலை செய்து வருகிறார். நான் என் தாய் தந்தையரை விட்டு என் மனைவியுடன் தனியாக வசிக்கிறேன்- எனது மனைவி ரூ4500/- சம்பளம் வாங்கிவருகிறார். நானும் வேலை செய்கிறேன் என்றாலும் நான் தற்போது மாதம் ரூ 10000/- மேல் சம்பாதித்து வருகிறேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமுலத்தில் பரமக்குடி மற்றும் சிவகங்கை மற்றும் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஆவணங்களை நான் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். அதை நான் நீதிமன்றததில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மாதவருமானத்தை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். விபத்து நடந்த அன்றே என்னிடம் புகார் பெற்றுவிட்டார்கள். எந்த இடத்தில் பெற்றார்க்ள் என்றால் பரமக்குடி மற்றும் மதுரை ஆகிய 2 இடங்களில் வாங்கினார்கள். விபத்தில் எனக்கு சிறுகாயங்கள்தான் ஏற்பட்டது என்பதுதாலும் 1 எதிர்மனுதாரருக்கு காயங்கள் ஏற்படவில்லை என்பதாலும் தவறுதாலாக அவர் மீது முதல் தகவல் அறிக்கை போடபப்பட்டது என்றால் சரியல்ல. நான் புகார்கொடுத்த கிரிமினல் வழக்கின் தற்போதைய நிலை பற்றி எனக்கு தெரியாது. புகார் தொடர்பாக என்னிடம் புகார் பெற்ற பின் காவல்துறையின்ர் எவ்வித விசாரனையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் விபரம் தவறானது என்பதாலேயே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபின்பு அந்த புகார் தொடர்பாக எவ்வித மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்தானது எனது கவனக்குறைவால் நடந்தது என்றாலும் 1, 2 எதிர் மனுதாரர் எந்த வித இழப்பீடும் கொடுக்க கடமை பட்டவர்கள் அல் ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.08.27 21:28:24 +0530

Chief Judicial Magistrage

Sivagangai